# அழகப்பா பல்கலைக்கழகம்

(தேசிய தர நிர்ணயக் குழுவின் மூன்றாம் சுற்று மதிப்பீட்டில் A+ (CGPA:3.64) தகுதி பெற்றது)

**காரைக்குடி 630 003**

நாள்: 7.3.2019

அழகப்பா பல்கலைக்கழக, அழகப்பா திறன் மேம்பாட்டு நிறுவனம் ஏற்பாடு செய்த FACON Fest 2019 என்னும் நவநாகரிகக் கலைவிழா, 06.03.2019 அன்று லெ.சித.லெ.பழனியப்பச்செட்டியார் நினைவு அரங்கில் நடைப்பெற்றது.




பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் N.ராஜேந்திரன் அவர்கள் தலைமையுரையாற்றினார். அவர் தனது உரையில் கல்வி என்பது தனிமனிதனுக்கு மட்டுமல்லாது ஒரு நாட்டின் வள்ர்ச்சிக்கும் உதவுவதாக வேண்டும்இ இதை உணர்ந்துதான் இந்திய அரசாங்கம் மற்றும் தமிழ்நாடு அரசு திறன் மேம்பாட்டு துறைக்கு அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது. இத்துறையில் எண்ணற்ற பிரிவுகள் உள்ளன அவற்றுள் ஆடை வடிவமைப்பியல் என்பது நமது பாரம்பரியமான துறையாகும். இத்தொன்மைவாய்ந்த துறையில் மாணவர்கள் தங்கள் புதுமையான யுக்திகளின் மூலம் தொழில்முனைவோர்களாக வருவதற்கான வாய்ப்புகள் நிறைந்து உள்ளதுஇ அத்துடன் இத்துறையில் எண்ணற்ற வேலை வாய்ப்புகளும் உள்ளன என்று கூறினார்

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்ற மதுரை, குவாலிட்டி நிட் வியர்ஸ் பிரைவெட் லிமிட்டெட்டின் நிர்வாக இயக்குனர் திரு.குமரன்.டீ.ஜகுவா அவர்கள் தனது உரையில் நவநாகரீக ஆடை வடிவமைப்பியல் துறையானது கல்வியோடு அல்லாமல் வாழ்க்கையோடு தொடர்புடையது, இத்துறையின் முக்கியத்துவத்தையும் மற்றும் மேலைநாடுகளில் இந்த படிப்பிற்கு அதிக முக்கியத்துவம் தரப்படுகிறது என்பதையும் மாணவர்கள் நன்கு உணர வேண்டும். நேரம் தவறாமையும்இ அர்ப்பணிப்பு உணர்வும், சிறந்த உற்பத்தி பொருள்களை வழங்கும் திறமை பெற்றிருந்தால் மாணவர்கள் இத்துறையில் சாதிக்கலாம். இதில் படிக்கும் மாணவர்களுக்கு பல்வேறு வகையான வேலை வாய்ப்புகள் உள்ளன. இவர்கள் ஜவுளி நிறுவனத்தில் வடிவமைப்பாளராகவும், தரம் சரிபார்ப்பவராகவும், ஏற்றுமதி துறையில், மெர்ச்சன்டைசராகவும் பணியாற்ற முடியும், அத்துடன் தொழில் தொடங்குவதற்கான வாய்ப்புகள் கொண்ட துறையாகவும் உள்ளது என்றார்.

இவ்விழாவில் அழகப்பா பல்கலைக்கழக, அழகப்பா திறன் மேம்பாட்டு நிறுவனம்இ 06.03.2019 அன்று காலையில் நடத்திய, டிசைனர் கான்டெஸ்ட், ஃபேஷன் இல்லஸ்ட்ரேசன், மெஹந்தி, ஃபேஸ் பெயிண்டிங்க், வெல்த் ஃப்ரம் வேஸ்ட், அக்சசரி மேக்கிங்க், நெயல் ஆர்ட் சாரி டேரேப்பிங் போன்ற 8 விதமான நவநாகரிக வடிவமைப்பு சம்பந்தமானப் போட்டிகளில் 8 கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகத் துறைகளைச் சார்ந்த 200 மாணவ, மாணவிகள் பங்கு பெற்றனர். இப்போட்டிகளில் வெற்றிப்பெற்ற மாணவ-மாணவியர்களுக்கு சிறப்பு விருந்தினர்கள் பரிசளித்து வாழ்த்தினர்.

முன்னதாக, இவ்விழாவில் அழகப்பா பல்கலைக்கழக கல்வயியல்புல முதன்மையர் மற்றும் அழகப்பா திறன் மேம்பாட்டு நிறுவனத்தின் இயக்குநர் முனைவர் பூ.தர்மலிங்கம் அவர்கள் வரவேற்புரையாற்றினார். அழகப்பா திறன் மேம்பாட்டு நிறுவன உதவிப் பேராசிரியர் முனைவர்.க.மகேஷ் அவர்கள் நன்றியுரையாற்றினார்.

பேரா.ஹா.குருமல்லேஷ் பிரபு

பதிவாளர்